சிறுவர்

# அமுதம்

19.06.1997

கிண்ணம்: 8 எண்ணம்: 6



சிறுவர் இலக்கிய மாதச் சஞ்சிகை.

KINDER LITERARISCHES MAGAZIN

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்
–சுப்பிரமணியபாரதி–

அன்புச் சிறுவர் சிறுமியரே!

முன்னேற்றம் என்ற ஒரு சொல்லை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். முன்னேற்றம் என்பது வாழ்க்கைக்குத் தேவையானது. பிரபல்யமாக வாழும் பலரும் மிகவும் சாதாரணமானவர்களாகத் தான் பிறக்கிறார்கள். பின் எப்படிப் புகழ் அடைந்தார்கள். ஒவ்வொரு மனிதனும் பெரியவனாக அதாவது பணக்காரனாக, நடிகனாக, ஓவியனாகவோ பிறந்து விடுவதில்லை. அவன் அந்த நிலைக்கு வருவதற்கு எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பான். எவ்வளவு தோல்விகளைச் சந்தித்திருப்பான்.

தென் ஆபிரிக்காவில் ஓடும் ரெயிலில் இருந்து வெள்ளை இனவெறியர்களால் கறுப்பன் என இகழப்பட்டு, அவர்களால் துன்புறுத்தப்பட்டு, தூக்கி எறியப்பட்ட மோகனதாஸ் சோர்ந்து போய் விடவில்லையே?. சோர்ந்து தளர்ந்து போயிருந்தால் மகாத்மா காந்தி என்னும் ஒருவரை நாம் அறிந்திருக்க முடியுமா? அது ஒரு எடுத்துக்

காட்டு. ஒவ்வொருவரும் தாழ்வு மனப்பான்மையில் இருந்து விடுபட வேண்டும். சமீபத்தில் தொலைக்காட்சிச் செய்தியில் பரீட்சையில் தோல்வியடைந்து விடுவேன் என்ற நினைப்பில் தற்கொலை செய்த மாணவன் பற்றிக் கூறினார்கள்.

ஏன் அந்நிலை ஏற்படுகின்றது?. தோல்விகளைச் சந்திக்கும் மன உறுதி வேண்டும். கஷ்டங்களை எதிர் நோக்கவும், அதனில் இருந்து விடுபடவும் மனத்திடம் வேண்டும். இத்தடைகளை எல்லாம் விடுத்து வெற்றி அடைய வேண்டும் என்பதை மனத்தில் இலட்சியமாகக் கொள்ளல் வேண்டும். கீழே விழுவது மீண்டும் எழுவதற்குத் தான் என்பது பெரியவர்கள் வாக்கு. மனதில் எழும் தாழ்வுணர்ச்சியால் சோர்ந்து விடாமல் வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

*ஆசிரியை*

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

மோகம் அனைத்திலும் கண்மூடித்தனம் உண்டு. ஆனால் பணமோகத்தில்தான் மிக அதிகம்--

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## கணக்குப் புதிர்.

மாலி தன் நண்பனிடம் கேட்டான், கணக்கொன்று கேட்கிறேன். விடை சொல்வாயா? நண்பன் கணக்கில் கெட்டிக்காரன் என்று பேரெடுத்தவன். தலையை ஆம் என்று ஆட்டினான். மாலி அவனிடம் "இருபத்தொன்பதிலே பத்தொன்பது போனால் எத்தனை?"

உடனே நண்பன் "பத்து" என்றான்.

மாலி நண்பனிடம் சொன்னான். "இல்லை. பத்தொன்பது. நான் இரு பத்தொன்பதில் பத்தொன்பது போனால் எத்தனை என்று தானே கேட்டேன். விடை 2X19:: 38 அல்லவா? அதில் 19போனால் 19தானே மீதமாகும்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

அரசியல் அறிவு பெற்றவர்கள் குடிசைக்குள் முடங்கினால், நாடு சந்தர்ப்பவாதிகளிடம் சிக்கிக் கொள்ளும்-

-எமல்டன்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

# காகமும் எறும்பும்



எருதுக் கொம்பில் ஒரு காக்கா
ஏறிக் கொண்டதாம்!
எறும்பை அது கூவிப் பெருமை
காட்டிச் சிரித்ததாம்!

எருதுக் காதில் அந்த எறும்பு
புகுந்து கொண்டதாம்!
எருது காது வலியால்-தன்
தலையை அசைத்ததாம்!

இருந்த காக்கா விரைவாகப்
பறந்து விட்டதாம்!
எறும்பு அதனைக் கண்டு விழுந்து
விழுந்து சிரித்ததாம்!

பெருமை பேசித் திரிந்திடுவார்
அது சரியில்லை!
பின்னால் சிறுமை அடையக் கூடும்
அது பெருந் தொல்லை!

-ஜெயசாந் அனோரஞ்சிதராஜா-

# அழகு சாதனங்கள்




மனிதன் நாகரீகம் வளர்ந்த கால கட்டத்தில் மனிதன் ஆடை அணிகளில் கவனம் செலுத்தினான். பிறர் தன்னைக் கவனிக்க வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் கொண்டான். இதனால் பலவிதமாக வர்ணங்கள் முகத்தில் தீட்டிக் கொண்டான். தலையில் பலவிதமான மலர்களைச் சூடிக் கொண்டான். தொடக்க காலத்தில் ஆண் பெண் இருபாலாரும் ஒரேவிதமாகவே அலங்காரத்தில் ஈடுபட்டனர்.

பிற்காலத்தில் பெண்களே தங்களை அலங்கரிப்பதில் கூடுதல் ஈடுபாடு கொண்டனர். இயற்கையான பொருட்களையே அலங்கரிக்கப் பயன் படுத்தினர். மஞ்சள் பிரதான இடத்தை வகித்தது. தலைமுடிக்கு சாம்பிராணி, அகில் போன்றவற்றின் மூலம் மணமூட்டினர். தாம் இருக்கும் இடத்தையும் வாசனைப் புகையூட்டினர்.

இது நம்நாட்டின் வழக்கம். மேலை நாட்டினரான ஐரோப்பியர்கள் எப்படித் தங்களை

அழகு படுத்திக் கொண்டார்கள் என்பதை அறிந்து கொள்வோமா? காஸ்மடிக்ஸ் என்பவர் கி.மு5000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர்கள் அழகுக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்று கூறுகின்றார்.



எகிப்தியர்கள் தங்கள் கண்கள் அழகாகவும் கருமையானதாகவும் காட்டுவதற்காக, கோல் (Kohl) எனப்படும் கறுப்புச் சாயத்தைப் பாவித்தனர். விழிகளைச் சுற்றிப் பச்சை வர்ணம் தீட்டினர். மையை தீட்டுவதற்குச் சிறு குச்சிகளைப் பாவித்தனர். பறவைகளின் இறகுகளைத் தலையில் சூடிக் கொண்டனர்.

முகத்தை வெள்ளை நிறமாக்கும் எண்ணத்துடன் சுண்ணாம்பு, ஈயக்கலவை, போன்றவற்றைக் கிரேக்கப் பெண்கள் பவுடர் பூசுவதைப் போல தடவிக் கொண்டார்களாம். கண்கள் அழகாகத் தெரிவதற்கு கறுப்புச் சாயமும்,கன்னங்களுக்கும் உதடுகளுக்கும் ஃபூகஸ் (Fucus) எனப்படும் சிவப்புத்தூளையும், தோலில் ஏற்படும் சுருக்கம் வெடிப்பு இவற்றை இல்லாமல் செய்வதற்கு பார்லியை மாவாக்கி முகத்தில் பூசிக் கொண்டனர். வெண்ணெய் தடவிக் கொண்டனர்.

கி.பி முதலாம் நூற்றாண்டுக் காலத்தில் ஐரோப்பியர்கள் களிம்புகளைத் தயாரித்துப் பயன் படுத்தினர். ரோமானியர் இக்களிம்புகளை க் கூடுதலாகப் பயன் படுத்தினார்கள். ரோஜா போன்ற வாசனையுள்ள மலர்களை, ஒலிவ் எண்ணெய்யில் ஊறவைத்து உடம்பில் தடவிக் கொண்டனர். சருமத்தை



மென்மையாக்கப் பாவித்தனர். தலையில் உள்ள கேசத்தைத் துப்பரவு செய்யவும் அறிந்தனர்.

கீழைத் தேசங்களுக்கு நாடு பிடிக்கவும், வணிகத்தை மேற் கொண்டு வந்த ஐரோப்பியர்கள் அங்குள்ள அழகு சாதனங்களின் இரகசியத்தை அறிந்து கொண்டனர். மருதோன்றி, மலர்களைக் கொண்டு காய்ச்சிய கண் மை ஆகியவற்றை உபயோகித்தனர். மருதோன்றி இலைகளின் சாறு கொண்டு விரல் நகங்களைச் சிவப்பாக்கினர். இவைகளின் தரம் உயர்ந்ததாகவே இருந்ததால் கண் மைக்கு பெல்டோனா என்னும் விஷத்தாவரத்தில் இருந்து பெறப்பட்ட களிம்பைத் தடவினர். இதேபோல அபாயமுள்ள வெள்ளைப் பொருளைத் தோலை மெதுவானதாக்கப் பயன் படுத்தினர்.

முதலாம் எலிசபெத் மகாராணியின் ஆட்சிக்காலத்தில் ஸ்வீட் கா.்.பர்ஸ் என்ற அழகு சாதசங்கள் அடங்கிய பெட்டியைப் பயன் படுத்தினர். இவர்கள் பயன் படுத்திய பல பூச்சுகள் கடினமானவை. பின்பட்ட காலத்தில் தானியத் தூள்கள் பதிக்கப்பட்ட தாள்களை



(Papier Powdre) முகத்தைப் பளபளப்பாக இருப்பதற்குப் பாவித்தார்கள்.

ஆனால் இன்று "மேக்கப்" என்பது பெரும்கலையாகி விட்டது. விதம் விதமாக களிம்புகளும், சாயங்களும் பாவனைக்கு வந்து விட்டன.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

நம்மிடம் உள்ள திறமைக்காகப் பாராட்டப் படுவதைக் காட்டிலும், நம்மிடம் இல்லாத ஒரு திறமைக்காகச் சிறப்படைய வேண்டும்என்பது பற்றித்தான் நாம் எப்பொழுதும் கவலைப்படுகின்றோம்.

-மார்க் ட்வைன்.-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## சொற்களைக் கண்டு பிடியுங்கள்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன் | ர | சு | அ | சை | வு | க | ள் | ஆ | ம் |
| ம் | க | அ | வ | தி | ரா | ட் | சை | ச் | ப |
| ய | சு | மை | தா | ங் | கி | டை | வ | ந | ப் |
| பா | த் | தி | ர | ம் | த | ம | ம் | ச | யா |
| அ | மா | வி | ம் | ண | ன் | க | ச | க் | கை |
| ச | ம் | பு | ற் | று | நோ | ய் | ம் | ம | ஒ |
| ண் | ண | ம் | ர | த | ய் | செ | ய | ல் | ப |
| மா | ண் | பு | ட் | டு | அ | வ | தா | ன | ம் |
| ண | க | தி | ந் | த | த் | ன | தி | பா | ரு |
| ம் | க | ய | தா | ணி | ய | ம் | கு | டு | க |

முடிவுதிகதி: 7.8.97

# சினேகிதம்



ஒரு காட்டில் முயலும் குரங்கும் சினேகிதமாய் இருந்து வந்தன. இரண்டும் வேறுவேறு இடத்தில் வாழ்ந்து வந்தபோதிலும் அடிக்கடி சந்தித்து சென்ற இடங்களில் கண்டது கேட்டது எல்லாவற்றையும் கதைத்துக் கொண்டன. ஒரு நாள் குரங்கு முயலைத் தேடி வந்து கொண்டிருந்தது. முயல் வேறு சில முயல்களோடு எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்தது.

"உன்னைத் தேடித் தான் வந்து கொண்டிருக்கிறேன். எப்போது குழந்தைகள் பெற்றுக் கொண்டாய்? குழந்தைகளின் அப்பாவைக் காணவில்லையே?" என்று கேட்டது. அதற்கு முயல் "சும்மா, கேலி செய்யாதே.

உனக்குத் தெரியாமல் நான் எப்படிப் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியும்?. இவர்கள் என் அண்ணனின் குழந்தைகள். என்னிடம் சிலகாலம் தங்கி இருந்து விட்டுப் போக வந்திருக்கிறார்கள். காட்டைச் சுற்றிக் காண்பிக்கின்றேன். அவ்வளவு தான். நீ என்னுடனேயே வருகிறாயா? அல்லது .........." என்று நிறுத்தியது.

"இல்லை. நீ, கூட்டிச் செல்லு. எனக்குச் சில வேலைகள் இருக்கின்றன. அதை முடித்து விட்டு மாலை வருகின்றேன்." என்று கூறி விட்டுப் பதிலுக்குக் காத்திருக்காமல் குரங்கு ஒரு கிளையில் இருந்து மற்றக் கிளைக்குத் தாவிச் சென்றது. முயல் தன் மருமக்களுடன் அடந்த பற்றைக்குள் இருந்து பறந்த தேன் சிட்டைக் காட்டியது. அந்த வேளையில் சிறிது தூரத்தில் காட்டுப்பூனை ஒன்று வருவதைக் கண்டது. மற்ற முயல்களோடு பற்றை ஒன்றுக்குள் பதுங்கிக் கொண்டது.

"காட்டுப்பூனை சென்று மறையும் வரை யாரும் சத்தம் செய்யாதீர்கள்." என்று மருமக்களை எச்சரித்தது முயல்மாமி.

காட்டுப்பூனை மறைந்ததும், வெளியே முயல்குட்டிகளை அழைத்துக் கொண்டு வந்தது. குரங்குக்கும் தனக்கும் எதிரியான குள்ளநரி தங்களைக் கவனித்ததை முயல் கண்டு கொள்ளவில்லை. குள்ளநரி பதுங்கிப் பதுங்கி இவர்கள்

போகும் இடமெல்லாம் வந்தது. ஆனால் முயல் குள்ளநரியைக் காணவேயில்லை.

மாலையும் வந்தது. தன் வேலைகளை முடித்துக் கொண்டு குரங்கு திரும்பி வந்து கொண்டிருந்தது. குள்ளநரி பதுங்கிப் பதுங்கிப் பற்றைகளுள் ஒளிந்து கொண்டு செல்வதைக் கண்டு தானும் மரங்களின் கிளைக்குக்கிளை தாவி ஒளிந்து கொண்டே சென்றது. பின் விரைவாகச் சென்று மரக்கிளை ஒன்றில் ஒளிந்து கொண்டு, கீழே குனிந்து பார்த்தது. முயலும் முயல்குட்டிகளும் செல்வதைப் பார்த்தது. விஷயத்தைப் புரிந்து கொள்ளக் குரங்குக்குச் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்!.

குள்ளநரியும் தருணம் பார்த்து முயல்களின் மேல் பாயும் நேரம் குரங்கு குள்ளநரியின் மேல் பாய்ந்தது. கழுத்தை இறுக்கக் கட்டிக் கொண்டது. குள்ளநரி திணறிக் கொண்ட வேளையில்,முயலும் தனக்கும் முயல்குட்டிகளுக்கும் நேர இருந்த ஆபத்தைத் தெரிந்து கொண்டது. நட்புக்கு இலக்கணமாகத் தனக்கு உதவி செய்த குரங்கின் மேல் முயலுக்கு இருந்த மதிப்பு இரட்டிப்பாகியது. குரங்கு தன்பிடியைத் தளர்த்தியதும், தப்பினேன்! பிழைத்தேன்! என்று குள்ளநரி ஓட்டம் பிடித்தது.

# அரசனும் சிறுவனும்



அரசன் மாறுவேடத்துடன் நகர சோதனை செய்து கொண்டிருந்தான். பழைய காலங்களில் அரசர்கள் மக்களின் குறைகளை அறிந்து கொள்வதற்காகச் சாதாரணமானவர்களைப் போல வேடமிட்டு நகரங்களில் பல இடங்களுக்கும் சென்று வருவது வழக்கம். அன்று நகரத்தை விட்டுக் கிராமங்களுக்குச் சென்று வர எண்ணிக் கொண்டு தணிகையூருக்குத் தன் குதிரையில் ஏறிப் புறப்பட்டான்.

தணிகையூருக்கு அருகில் வந்ததும் அங்கிருந்த மடத்தில் தன் குதிரையை ஒப்படைத்து விட்டுக் கிராமத்துக்குள் கால்நடையாகச் சென்றான். ஓரிடத்தில் சிறுவன் ஒருவன் பெரியவர், சிறியவர்கள்

மத்தியில் நின்று அவர்களுடன் வாதிட்டுக் கொண்டிருந்தான். அவன் வாதம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த இருவர் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவர் மற்றவரிடம், "தங்கனாவது யாரிடமாவது தோற்பதாவது, பெரியவனாகும்போது இவன் பெரிய பெரிய சபைகளில் வாதிட்டு வென்று விடுவான்" என்று பெருமையுடன் பேசிக் கொண்டார்கள். அவர்கள் பெருமையாகப் பேசிய சிறுவனின் பெயர் தங்கன் என்பதை அறிந்து கொண்ட அரசன் அவனைத் தன் சோதித்துப் பார்க்க எண்ணினான்.

அடுத்த நாள் தங்கனைத் தனிமையில் ஆற்றங்கரையில் சந்தித்தார் அரசர். "நீ பெரிய கெட்டிக்காரன் என்று எல்லோரும் சொல்லக் கேட்கின்றேன். நீ உண்மையிலேயே கெட்டிக்காரனாக இருந்தால் இப்பொழுதே என்னை இந்த ஆற்றில் குதிக்க வை. பார்க்கலாம்" என்றார். அரசரை மேலும் கீழுமாக ஒருதரம் பார்த்த தங்கன், "நீங்கள் யாரோ எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் கேட்டதைச் செய்விக்க என்னால் முடியாது. ஆழமான ஆற்றில் மூழ்கி இறந்து விடுவீர்கள். உங்களுக்கு நீந்தத் தெரியாது போலத் தெரிகின்றது." என்றான்.

"எனக்கா நீந்தத் தெரியாது. நீ தோற்றுவிட்டாய் என்று கூறிக் கொண்டே ஆற்றுக்குள் குதித்து நீந்திக் கரையேறினார் அரசர். பின் "எனக்கா நீந்தத் தெரியாது என்று கூறினாய்! இப்போ யார் கெட்டிக்காரன் என்று தெரிந்து விட்டதல்லவா?" என்று சிரித்துக் கொண்டே கூறியவரிடம், தங்கன் "உண்மை தான். ஆனால் உங்களை ஆற்றில் எப்படியாவது குதிக்க வைக்க வேண்டுமென்று தானே நீங்கள் கூறினீர்கள்." என்று கூறிவிட்டுச் சிரித்தான் தங்கன்.

அவரும் அவனது புத்திசாலித்தனத்தை நினைத்துச் சிரித்துக் கொண்டார். பின் அரண்மனைக்கு அழைத்து அவனுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

நேற்று என்பதை மறந்து விடுங்கள். நாளை எப்படியோ அதைப் பற்றியும் கவலையை விடுங்கள்.

-விவேகானந்தர்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

மூங்கில்கள் புல் இனத்தைச் சேர்ந்தவை. உலகத்தில் 500 வகையான மூங்கில்கள் இருக்கின்றன. இவற்றின் வளர்ச்சி மிகவும் வேகமானது. ஒரே நாளில், 41செண்டிமீற்றருக்கு வளரக் கூடியவை. இப்படி 36 மீற்றர் வரை வளரும். பெரும்பாலான மூங்கில்கள் ஒவ்வொரு ஆண்டும் பூக்கக் கூடியவை. சில வகைகள் நூறு ஆண்டுகளுக்கு நான்கு முறைதான் பூக்கும். மூங்கில் முளைகளை வேகவைத்து உண்கிறார்கள். இது தேங்காயின் சுவையைப் போல இருக்கும்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

உலகிலேயே அதிக தூரம் நடந்தவர் மோரீஸ் நாட்டைச் சேர்ந்தவர் ஆவர். அவர் 1.35 லட்சம் கிலோ மீற்றர் நடந்துள்ளார்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

வாழ்வில் மனநிறைவென்பது, உங்கள் ஆற்றலின் உறுதியைப் பொறுத்தது.

-கவிஞர்மோந்த்தேன்-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

இ - வ
சிறுவர்
சிறுவர்கள்
சிறு
கள்
மண்
மண்வெட்டி
வங்கி
வர்ணம்
ராசா
புத்தன்
தன்
பப்படம்
படம்
துளசி
மடி
சுடு
சின்னம்
சிவன்
பொறி

வ - இ
படகு
குறள்
வறு
வடி
வெண்
சம்மதம்
மதம்
புரு
பழுது
துயரம்
கதி
துட்டு
பூதம்
கை
கைது
துலா
பொல்லாதவன்

மே - கீ
வருமானம்
மானம்
தடி
வண்ணத்துப்பூச்சி
பூச்சி
பகட்டு
கட்டு
மதி
மதிப்பு
துலா
மா
மால்
சதி
ரசிகை
சிகை
கிராமம்
பஞ்சாயத்து

கீ - மே
சிம்மம்
மாரு
வஞ்சி
வட்டி
தடு
தடுப்பு
மறு
சுடு
தம்
மடி
மாது
மாதுளம்பழம்
பழம்
பொக்கை
சங்கு
ரம்மியம்
சப்பாத்து


முடிவுகள்:

1.விஜிதா விநாயகமூர்த்தி -▶▶ Denmark
2.முகுந்தன் மகேந்திரன் - Berg.gladbash
3.பிரகாஸ் கந்தவனம் - Norway
4.ஜெயதீபா இரத்தினசபாபதி- Eschelbronn
5.ஜீலன் தனஞ்சயன் - Meschede
6.மஞ்சுளா சிவசம்பு - Lohmar
7.கௌரிசங்கர் சரவணபவன்-Solingan
8.ஜெயானந்தன் கண்ணன் -Berg.gladbach
9.திவாகர் ரவிக்குமார் - Denmark
10.கிரிசாந் மனோரஞ்சிதராஜா -Münster
11.ஜெயமாலா இரத்தினசபாபதி-Eschelbronn
12.டுஷன் தனஞ்சயன் - Meschede
13.ஜெயசாந் மனோரஞ்சிதராஜா- Münster
14.மோகன் இரத்தினசபாபதி - Eschelbronn

▶▶ இந்த அடையாளமிடப் பட்டவர்கள் பரிசைப் பெறுகிறார்கள்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡
வேப்ப மரங்களில் 32 வகையான மரங்கள் இருக்கின்றன.
✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## கொரில்லா



கொரில்லா குரங்குகள் ஆறடி உயரமும், 200 கிலோ நிறையும் கொண்டவை. கறுப்பு நிறம் கொண்ட இவைகள் பார்ப்பதற்குப் பயங்கரமான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் அமைதியான தன்மையைக் கொண்டிருப்பவை. பொறுமையான குணம் கொண்டவை. ஆனாலும், கொரில்லா திடீரென்று எழுந்து நின்று, ஒரு பக்கமாகச் சரிந்த நிலையில் ஓடிக் கொண்டு, பெரிதாகச் சத்தமிட்டபடி தன் இரு கைகளாலும் மார்பில் படபடவென்று அடித்துக் கொள்ளும்.

இதைப் பார்க்க மிகவும் பயமாக இருக்கும். அருகில் போகிறவர் மீது பாய்ந்து கீறிக் கிழித்துக் கடித்து விடுமோ, என்று பயம் வரும். ஆனால் கொரிலாக்கள் ஒரு மனிதனையாவது தாக்கியதாகத் தெரியவில்லை. ஆண் கொரிலாக்கள் மட்டும், பயந்தோடும் மனிதனை விரட்டிச் செல்லும். ஆனால் தாக்கிக் கொல்லாது. ஆண் பெண் கொரிலாக்கள் தம் மார்பில் அடித்துக் கொள்ளுவதற்குக் காரணம் தங்களுடைய உணர்ச்சிகளைச் சமாளித்துக் கொள்ளத்தான்.

பிலிப்பைந்தீவுகள்.



பசுபிக்சமுத்திரத்தில் இருக்குப் தீவுகளில் பிலிப்பைந்தீவுக்கூட்ட-மும் ஒன்றாகும். இவை ஆசியா கண்டத்தைச் சேர்ந்தவை. இக்-கூட்டத்தில் கிட்டத்தட்ட 7000 தீவுகள் இருக்கின்றன. உலகிலே மிகவும் ஆழமான மின்டோனா ஆழம் (2954மீற்றர்) இங்கு இருக்கின்றது. இக்கூட்டம் 300,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டிருக்கின்றன. இதன் தலைநகரம் மணிலா. இவற்றில் 11பிரதானதீவுகள் உள. இங்கு வாழும் மக்கள்தொகை 54,4மில்லியன். இங்கு பிலிப்-பைந்துஇனத்தவர், நீக்கிறோஸ்இனத்தவர், சீனஇனத்தவர் என்போர் வாழ்கின்றார்கள். இங்கு எரிமலைகள் இப்பொழுதும் இயங்குகின்றன. 1521ஆம் ஆண்டுகளில் நாடுகாண்பலத்தில் ஈடுபட்ட மகெலனால் இத்தீவுகள் கண்டறியப்பட்டது.

இம்மக்கள் பேசும் மொழி **Filipino**, ஆங்கிலம். மக்கள் பின்பற்றும் சமயங்கள் கிறிஸ்தவம், இஸ்லாம். இந்நாட்டு நாணயத்தின்பெயர் **Peso**. பிரதான உற்பத்திப் பயிர்கள் கரும்பு, அரிசி, அன்னாசி, தென்னை, சோளம் என்பன.

அனுப்பியவர்: கபிலன் பரமசிவம்

# மனத் திடம்



அமெரிக்காவில் சிக்காகோ நகரில் சர்வ மதத் தலைவர்களின் மாநாடு நடந்து கொண்டிருந்தது. இந்து மதத் தலைவர் ஒருவரும் கலந்து கொண்டார். அவர் அங்கு தங்கியிருந்த வேளையில் மாலை நேரங்களில் கடற்கரையில்

உலவி வருவது வழக்கம். ஒருநாள் கடற்கரையில் அதன் இயற்கை அழகில் மனதைப் பறி கொடுத்தபடி, நேரமே தெரியாமல் அமர்ந்திருந்தார்.

திடீரென்று ஆரவாரமான சத்தம் கேட்கவே, அவர் திரும்பிப் பார்த்தார். சில இளைஞர்கள் கடலலைகளோடு போட்டி போட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதை கவனித்துப் பார்த்த அவருக்கு, அதில் ஈடுபாடு உண்டாயிற்று. ஓரளவு நெருங்கி நின்று அவர்களின் விளையாட்டை உற்று நோக்கினார்.

சின்னப் பந்து ஒன்றைக் கடலில் வீசினார்கள். பந்து அலையில் சிக்குண்டு கரை திரும்பிக் கொண்டிருந்தது. அந்தப் பந்தைக் குறி வைத்துத் துப்பாக்கியால் சுட வேண்டும். ஒவ்வொரு இளைஞனும் குறி பார்த்துச் சுட்டனர். எல்லோருடைய இலக்கும் பிழைத்துப் போகவே, எல்லா இளைஞர்களும் ஒருவரை ஒருவர் கேலி பேசுவதும், சிரிப்பதுமாக விளையாட்டைத் தொடர்ந்தனர். அந்தச் சத்தமே, அவரின் ஏகாந்தத்தைக் குலைத்தது என்பது சொல்லாமலே புரியும்.

விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த மதத்தலைவர் தன்னை மறந்து சிரித்து விட்டார். தங்களைக் கேலி பண்ணிச் சிரிக்கிறார் என்று எண்ணிய இளைஞர்கள் அவரை நெருங்கினார்கள். அவர்களில் ஒருவன், அவரைக் மேலும்

நெருங்கினான். "துறவியாரே, ஏன் பரிகசித்துச் சிரிக்கிறீர். இது என்ன? சின்னஞ் சிறிய விளையாட்டு என்றா எண்ணிச் சிரிக்கிறீர்? என்று கோபத்துடன் சொன்னான்.

அவனை ஏறிட்டுப் பார்த்த அம்மதத்தலைவர் துப்பாக்கியைக் கையில் வாங்கினார். பந்தைக் கடலில் வீசும்படி சொன்னார். "காவி உடை தரித்த துறவி நீர்! துப்பாக்கி பிடித்துச் சுடத் தெரியுமா உமக்கு" என்று ஏளனமாகச் சிரித்தபடியே பந்தைக் கடலில் வீசினான் அந்த இளைஞன். துப்பாக்கியால் குறி வைத்துச் சுட்டார். என்ன ஆச்சரியம்! குறி தப்பாமல் பந்தைச் சுட்டு விட்டார். ஆச்சரியம் தாளாத இளைஞர்கள் மீண்டும் மீண்டும் பந்தைக் கடலில் வீசினார்கள்.

குறி தப்பாமல் காவியுடைத் தலைவரும் பந்தைச் சுட்டார். இளைஞர்களுக்கு தாம் அவரைப் பற்றிப் போட்ட கணக்குப் பிழையானது என்பதை அறிந்து கொண்டனர். அவரிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். "தாங்கள் யார்? துப்பாக்கி சுடுவதில் கெட்டிக்காரராக இருக்கிறீர்களே!" என்று அவரைச் சூழ்ந்து கொண்டனர். மதத்தலைவர் சிரித்துக் கொண்டார். பின் அவர்களைப் பார்த்து, "இல்லை. இளைஞர்களே, நான் முதல்முதலாக இன்று தான் துப்பாக்கியைத் தொட்டிருக்கிறேன்." என்றார்.

அப்படியானால் எவ்வாறு குறி தவறாமல் சுட முடிந்தது? என்று இளைஞர்கள் கேட்ட கேள்விக்கு இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது. மனத்தை அலைய விடாமல் கவனத்தை ஒருநிலைப் படுத்தி பந்தைக் குறி வைத்துச் சுட்டேன். அவ்வளவு தான். மனத்தை ஒருநிலைப் படுத்திச் செய்யும் காரியங்கள் எல்லாம் வெற்றியைத் தரும்.'' என்றார் அந்த மதத்தலைவர். அவர் நாம் அறிந்தவர் தான். இந்து மதமே பெருமை கொள்ளும் அளவிற்கு இந்துமதத்தையே உலகறியச் செய்த சுவாமி விவேகானந்தர் தான் அவர்.

## வேப்ப மரமும் மகாத்மாவும்



மகாத்மா சிறையில் வாழ்ந்த காலம். சிறையில் ஏராளமான வேப்ப மரங்கள் இருந்தன. வேப்பங்குச்சியாலேயே மகாத்மா பல் துலக்கிக் கொள்வார். சிறையில் வாழ்ந்த எல்லோரும் வேப்பங்குச்சியால் தான் பல் துலக்குவார்கள். மகாத்மா காந்தி தினமும் ஒரே

வேப்பங்குச்சியையே பாவித்து வருவதைக் கண்ட அவரின் நண்பர் ஒருவர் "பாபுஜீ, சிறையயில் வேப்ப மரத்துக்கா பஞ்சம். தினமும் ஒரே குச்சியைப் பயன் படுத்துகிறீர்களே" என்று கேட்டார்.


அதற்கு மகாத்மா "நண்பரே, நம்மைப் போல மரமும் ஒரு உயிர் தான். அதுவும் உண்கிறது. நீர் அருந்துகிறது. வளர்கிறது. நாம் துன்புறுத்தப் படும் போது நமக்கு நோகின்றதல்லவா! அது போலத் தானே மரத்துக்கும் நோகும்.நாங்கள் வாய் விட்டு அழுது வேதனைப் படுகின்றோம். மரத்துக்கு வாயில்லை. வேதனையைக் கொடுக்கும் நாம். அதைக் குறைவாகவே கொடுத்து விடுவோம். அதனை மீண்டும் மீண்டும் வேதனைப் படுத்துவதில் என்ன லாபம்." என்றார்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

பணிவு என்பது பெரும்பாலும் தற்பெருமையின் பாசாங்குகளில் ஒன்றுதான். தாழ்ந்து போவது போல பாசாங்கு செய்து தன்னைத்தானே உயர்த்திக் கொள்வதுதான் அது.

-லா ரோஷ்புக்கோ-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡




**NEKTAR FÜR KINDER**